## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை – திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 23–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு 2057 தைத்திங்கள் 09–ஆம் நாள்**
**முதலேற்பு வழக்கு எண்.62/2012–ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண்.03/2025**

**01. V. Nursing Spinning Mills private Limited Repby its Directors**
**02.A.L.சுரேஷ்பாபு**
**03. P. சுந்தரம்**
**04. M.ஆனந்தன்** ... **மனுதாரர்கள்/ 03 முதல் 06 உத்தேச பிரதிவாதிகள்.**

**–எதிர்–**

**01. M/s Paavai Constructions Rep. by its Managing partner**
**N. Mangaiyarkarashi** .. **01–ஆம் எதிர்மனுதாரர்/வாதி.**
**02. சாவித்ரிதேவி இனானி**
**03. விஜயா நர்சிங் இனானி**
...**02–ஆம், 03–ஆம் எதிர்மனுதாரர்கள்/ 01–ஆம் 02–ஆம் பிரதிவாதிகள்.**

இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்-களுக்காக வழக்குரைஞர் திரு.**P.மோகன்ராஜ்** அவர்களும் 01-ஆம் எதிர்மனு தாரருக்காக வழக்குரைஞர் திரு **K.M.ஜெயபால்** அவர்களும் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் திரு.**K.T.ராஜன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

மனுதாரர்களை முதலேற்பு வழக்கில் 03 முதல் 06 வரையிலான பிரதிவாதிகளாக சேர்த்து ஆணையிடக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 01-ஆம் வகுமுறையின் 10(2)-ஆம் விதியின்கீழ் மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர்.

## மனுவின் சுருக்கம்

**01.** 01-ஆம் மனுதாரர் நிறுவனம் சட்டப்படி 18.10.1995-ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்டத் தனியார் நிறுவனம் ஆகும். அதன் இயக்குனர் அறுவருள் மூவர் 02 முதல் 04 வரையிலான மனுதாரர்களும் ஒருவர் 02-எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதியும் ஆவார். மற்றொருவர் 02-எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதியின் சகோதர் பிரிஸ் கோபால் முந்த்ரா ஆவார். மற்றொரு இயக்குனர் ஓம்பிரகாஷ் இனானி ஆவார்.

**02.** 01-ஆம் மனுதாரர் நிறுவனம் தொடங்கப்பட்ட 18.10.1995-ஆம் தேதியன்று அதன் மொத்த மூலதனம் 25,00,000/- உரூபாய் ஆகும். அந்த 25,00,000/- உரூபாய் 300 சமமான பங்காக பிரிக்கப்பட்டது. 02-ஆம் மனுதாரர் 60 பங்கிற்கான 5,00,000/- உரூபாயும் 03-ஆம் மனுதாரர் 30 பங்கிற்கான 2,50,000/- உரூபாயும் 04-ஆம் மனுதாரர் 30 பங்கிற்கான 2,50,000/- உரூபாயும் 02-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி 90 பங்கிற்கான 7,50,000/- உரூபாயும் 02-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதியின் சகோதரர் பிரிஸ் கோபால் முந்த்ரா 15 பங்கிற்கான 1,25,000/- உரூபாயும் ஓம்பிரகாஷ் இனானி என்பவர் 75 பங்கிற்கான 6,25,000/- உரூபாயும் முதலீடுச் செய்தனர்.

03. 01-ஆம் மனுதாரர் நிறுவனத்தின் முதன்மையான தொழில் நூல் சம்மந்தப்பட்டது. தொழில் தொடங்கப்பட்டு இலாபத்துடன் இயங்கியது. 29.11.1995-ஆம் தேதியன்று 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் பெயரில் பச்சாக்கவுண்டர் வகையறாவிடமிருந்து 12.86 ஏக்கர் நிலம் 11,09,000/-

IIIrd ADJ Court, Salem

உரூபாய்கு விலைக்கு வாங்கப்பட்டு 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் சார்பாக 02 முதல் 04 வரையிலான மனுதாரர்களின் சுவாதீனத்தில் இருந்தது. மனுதாரர்கள் மேற்சொன்ன நிலம் முழுவதையும் சுற்றி வேலி அமைத்தும் சுற்றுச் சுவர் அமைத்தும் சுவாதீனத்தில் வைத்துள்ளார்கள். 02-ஆம் மனுதாரர் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்திற்காக அந்தச் சொத்தைப் பாதுகாத்தும் பராமரித்தும் வருகிறார்.

**04.** 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் இயக்குநர்களுள் ஒருவரான 02-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி அவருடைய உறவினருடன் கூட்டுச்சதிசெய்து செயல்பட்டு மேற்சொன்ன 12.86 ஏக்கர் நிலத்தைப் பொறுத்து 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் துணைவிதிகளுக்கும் நிறுவனச் சட்டத்திற்கும் எதிராக அனைத்து இயக்குனர்களின் சம்மதமின்றி உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் 26.03.1999-ஆம் நாள், 30.03.1999 ஆம் நாள், 31.03.1999-ஆம் நாள், 09.04.1999-ஆம் நாள் ஆகிய நாட்களில் 01-ஆம் மனுதாரரான நிறுவனம் மேற்சொன்ன நிலத்தை விற்றதுபோன்ற மோசடியான ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை.

**05.** 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதி கட்டுமான நிறுவனம் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளிடமிருந்து 01-ஆம் மனுதாரர் நிறுவனத்திற்குச் சொந்தமான 12.86 ஏக்கர் நிலத்தை வாங்க ஒப்பந்தம் செய்துகொண்டு முதலேற்பு வழக்கை ஏற்றதை ஆற்றுக நிவாரணம் கோரி தொடுத்துள்ளது. அந்தச் சொத்தை விற்பதற்கு 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும்

III rd ADJ Court, Salem

இல்லை. எதிர்மனுதாரர்கள் மூவரும் கூட்டுச்சதி செய்து முதலேற்பு வழக்கை தாக்கல்செய்துள்ளனர். இந்த வழக்கின் வழக்குச் சொத்து மனுதாரர்களுக்குச் சொந்தமானது. இந்த வழக்கில் நீதிமன்றத்தால் செய்யப்படும் முடிவு மனுதாரர்களின் உரிமையை பாதிக்கும். இந்த வழக்கிற்கு மனுதாரர்கள் அவசியத் தரப்பினர் ஆவர். ஆகையால், மனுதாரர்களை இந்த வழக்கில் 03 முதல் 06 வரையிலான பிரதிவாதிகளாகச் சேர்த்து ஆணையிட வேண்டும்.

**01–ஆம் எதிர்மனுதாரர்/வாதியின் எதிருரையின் சுருக்கம்**

**06.** 01-ஆம் மனுதாரரான வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் தொடங்கப்பட்டது குறித்தும் அதன் இயக்குனர்கள், மூலதனம், முதன்மை நோக்கம் ஆகியன குறித்தும் மனுவில் சொல்லப்பட்டுள்ள 12.86 ஏக்கர் நிலம் அந்த நிறுவனத்தின் பெயரில் வாங்கப்பட்டது குறித்தும் மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை. 1999-ஆம் ஆண்டு 01-ஆம் மனுதாரர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான திரு பிரிஸ் கோபால் மிந்த்ரா 01-ஆம் மனுதாரர் நிறுவனத்திற்காக மேற்சொன்ன 12.86 ஏக்கர் நிலம் முழுவதையும் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு 4 விற்பனை பத்திரங்கள் மூலம் விற்றுவிட்டனர். அதன் பிறகு அச் சொத்தில் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்திற்கோ அதன் ஆரம்ப கால இயக்குனர்களில் மூவரான இந்த மனுவின் 02 முதல் 04 வரையிலான மனுதாரர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை.

**07.** 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதி களிடமிருந்து மேற்சொன்ன 12.86 ஏக்கர் நிலம் விலைக்கு வாங்குவது சம்மந்தமாக 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதி 03.11.2010-ஆம் தேதியன்று

விற்பனை ஒப்பந்தம் எழுதிக்கொண்டு அந்த விற்பனை ஒப்பந்தப்படி 02 ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகள் செயல் - படாததால் ஏற்றை ஆற்றுக நிவாரணத்திற்காக முதலேற்பு வழக்கைத் தாக்கல்செய்தார்.

**08.** 12.86 ஏக்கர் நிலம் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு விற்கப்படுவதற்குமுன் 02 முதல் 04 வரை யிலான மனுதாரர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் இயக்குனராக செயல்படுவதிலிருந்து முறையாக நீக்கப்பட்டுவிட்டனர். நீக்கப்பட்டுவிட்ட இயக்குனர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் சார்பாக இந்த மனுவை தாக்கல்செய்ய முடியாது.

**09.** 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் சொத்துக்கள் 1999-ஆம் ஆண்டே விற்கப்பட்டுவிட்டன. அதிலிருந்து 15 ஆண்டுகளுக்குபின் அந்த விற்பனை சம்மந்தமாக காலங்கடந்து இந்த வழக்கில் வினா எழுப்ப முடியாது. ஆகையால், இதற்குமுன் சொல்லப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் இந்த மனுவை தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

**02–ஆம், 03–ஆம் எதிர்மனுதாரர்களின் ஆட்சேபணையின் சுருக்கம்**

**10. 01-**ஆம் மனுதாரரான வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் தொடங்கப்பட்டது குறித்தும் அதன் இயக்குனர்கள், மூலதனம், முதன்மை நோக்கம் ஆகியன குறித்தும் மனுவில் சொல்லப்பட்டுள்ள 12.86 ஏக்கர் நிலம் அந்த நிறுவனத்தின் பெயரில் வாங்கப்பட்டது குறித்தும் மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை. 1999-ஆம் ஆண்டு 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான திரு பிரிஸ்

கோபால் மிந்த்ரா 01-ஆம் மனுதாரர் நிறுவனத்திற்காக மேற்சொன்ன 12.86 ஏக்கர் நிலம் முழுவதையும் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம் , 02-ஆம் பிரதிவாதிகளுக்கு 4 விற்பனை பத்திரங்கள் மூலம் விற்றுவிட்டனர். அதன் பிறகு அச் சொத்தில் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்திற்கோ அதன் ஆரம்பகால இயக்குனர்களுள் மூவரான 02 முதல் 04 வரையிலான மனுதாரர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை.

**11.** 12.86 ஏக்கர் நிலம் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு விற்கப்படுவதற்குமுன் 02 முதல் 04 வரை யிலான மனுதாரர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் இயக்குனராக செயல்படுவதிலிருந்து முறையாக நீக்கப்பட்டுவிட்டனர். நீக்கப்பட்டுவிட்ட இயக்குனர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் சார்பாக இந்த மனுவை தாக்கல்செய்ய முடியாது.

**12.** 01-ஆம் மனுதாரரான நிறுவனம் நிறுவனப் பதிவாளரால் 10.07.2017 ஆம் நாளன்ற நிறுவனப் பதிவேட்டிலிருந்து அடித்து நீக்கப்பட்டு -விட்டது. நிறுவனப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்ட நிறுவனமோ அதன் சார்பாக வேறு யாருமோ அந் நிறுவனத்தின் பெயரில் எவ்வித வழக்கு நடவடிக்கையும் தொடுக்க முடியாது.02 முதல் 04 வரையிலான மனுதாரர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் இயக்குனர் பதவியிலிருந்து 1996-ஆம் ஆண்டு பதவி விலகல் கடிதம் கொடுத்து விலகிவிட்டதால் 02 முதல் 04 வரையிலான மனுதாரர்களுக்கும் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. அதன் பிறகு 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனரான பிரிஸ் கோபால் மிந்த்ராவும்

III rd ADJ Court, Salem

இயக்குனரான ஓம் பிரகாஷ் இனானியும் உரிய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி மேற்சொன்ன 12.86 ஏக்கர் நிலத்தை விற்றனர். விலைப் பணமும் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது. மேற்சொன்ன சொத்தை விற்க 02-ஆம் மனுதாரர் தரகராகவும் செயல்பட்டார். 03-ஆம் எதிர்மனுதாரர்/02-ஆம் பிரதிவாதியின் சகோதரியிடமிருந்து தரகுத் தொகையும் பெற்றார்.

13. வழக்குச் சொத்தில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. வழக்குச் சொத்தின் சுவாதீனம் மனுதாரர்கள் வசமில்லை. 02-ஆம் 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு மட்டுமே வழக்குச் சொத்துக்கள் சொந்தமானது. வழக்குச் சொத்துக்கள் சம்மந்தமாக 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதிக்கும் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கும் இடையே நடக்கும் ஏற்றதை ஆற்றுக நிவாரணத்திற்கான இந்த முதலேற்பு வழக்கில் மனுதாரர்கள் அவசியமற்ற தேவையில்லாத தரப்பினர்கள் ஆவர். ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

**14. இம் மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

15. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. 29.11.1995-ஆம் தேதியன்று 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் பெயரில் பச்சாகவுண்டர் வகையறாவிடமிருந்து 12.86 ஏக்கர்

III rd ADJ Court, Salem

நிலம் 11,09,000/-உருபாய்க்கு விலைக்கு வாங்கப்பட்டு 01-ஆம் மனுதாரர் நிறுவனத்தின் சார்பாக 02 முதல் 04 வரையிலான மனுதாரர்கள் உள்ளிட்ட இயக்குநர்களின் சுவாதீனத்தில் இருந்தது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக உள்ளன. அதுபோன்று 26.03.1999-ஆம் நாள், 30.03.1999 ஆம் நாள், 31.03.1999-ஆம் நாள், 09.04.1999-ஆம் நாள் ஆகிய நாட்களில் 01-ஆம் மனுதாரரான நிறுவனம் மேற்சொன்ன நிலத்தை விற்றது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டச் சங்கதிகளாக உள்ளன. மேற்சொன்ன விற்பனை சம்மந்தமாக கேள்வி எழுப்ப மனுதாரர்களுக்கு உரிமை உள்ளதா? என்ற கேள்வி எழுகிறது.

**16.** நிறுவனப் பதிவாளர் 10.07.2017-ஆம் தேதியன்று 01-ஆம் மனுதாரர் நிறுவனம் நிறுவனப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டது என்பதற்கு மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல்செய்துள்ளனர். 01-ஆம் மனுதாரர் நிறுவனம் நிறுவனப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டது என்ற சங்கதி, 02 முதல் 04 வரையிலான மனுதாரர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பில் இருந்து 1996-ஆம் ஆண்டே விலகிவிட்டனர் என்ற சங்கதி, அதன் பிறகு 02 முதல் 04 வரையிலான மனுதாரர்களுக்கும் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்ற சங்கதி ஆகியவற்றை 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/ 01-ஆம் 02-ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல்செய்துள்ள படிவம் எண் 32, விளம்புகை ஆவணம், DIN/DPIN ஆவணம் உள்ளிட்ட ஆவணங்கள் நிரூபிக்கின்றன.



IIIrd ADJ Court, Salem

**17.** 1996-ஆம் ஆண்டே 02 முதல் 04 வரையிலான மனுதாரர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் இயக்குனர் நிலையிலிருந்து விலகிவிட்டபின் அந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து கேள்வி எழுப்ப அவர்களுக்கு உரிமை இல்லை.

**18.** 02 முதல் 04 வரையிலான மனுதாரர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்தின் இயக்குனர்களிலிருந்து விலகியபின் எஞ்சிய இயக்குனர்கள் 01-ஆம் மனுதாரரான நிறுவனத்திற்கு பொறுப்பாக இருந்துள்ளனர். அவர்களில் பிரிஸ் கோபால் முந்த்ரா மேலாண் இயக்குனராக இருந்துள்ளார். 01-ஆம் மனுதாரரான நிறுவனம் அதன் புதிய மேலாண் இயக்குநர் மூலம் நிறுவனத்திற்குச் சொந்தமான 12.86 ஏக்கர் நிலத்தை மனுவில் சொல்லப் பட்டுள்ள 4 விற்பனை ஆவணங்கள் மூலம் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளுக்கு விற்றுள்ளனர். அந்தக் கிரயத்தின் அடிப்படையில்தான் 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதிக்கும் 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம்,02-ஆம் பிரதிவாதிகளுக்கும் விற்பனை ஒப்பந்தம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டு அதனடிப்படையில் ஏற்றதை ஆற்றுக நிவாரணம் கோரி முதலேற்பு வழக்குத் தொடுக்கப் பட்டிருக்கிறது. 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களி லிருந்து மேற்சொன்ன சொத்தை விற்பதற்கு 02-ஆம் மனுதாரர் சுரேஷ்பாபு தரகர் வேலை பார்த்தார் என்று தெரியவருகிறது. உண்மையில் அவருக்கு உரிமை இருந்திருந்தால் அவர் அத்தகைய வேலையை செய்திருப்பாரா என்ற கேள்வி எழுகிறது.

19. மேலே சொல்லப்பட்டது ஒருபுறம் இருக்க, 01-ஆம் மனுதாரரான நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் 1999-ஆம் ஆண்டே விற்கப் பட்டுவிட்டன. அவ்வாறான நிலையில் சுமார் 24 ஆண்டுகள் கழித்து அந்த விற்பனையை இந்த வழக்கு நடவடிக்கையில் தங்களை மனுதாரர்களாக சேர்த்துக்கொள்ளக் கோருவதன் மூலம் பூசல் செய்வதற்கு மனுதாரர்களுக்கு உரிமை இல்லை. மனுதாரர்களின் கோரிக்கை காலவரம்பால் பாதிக்கப் படுகிறது.

20. இதற்கு முன் விவாதித்தவற்றின் அடிப்படையில் மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர்களோ தேவையான தரப்பினர்களோ இல்லை என்றும் ஆகையால், இந்த மனுவை அனுமதிப்பதற்கான முகாந்திரம் இல்லை என்றும் இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

21. இறுதியாக, இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026—ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 23—ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.01.23 18:24:48 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

IIIrd ADJ Court, Salem

## மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள்

| | |
|---|---|
| 01 | Certificate of information dated 18.10.1995- நகல் |
| 02 | 29.11.1999-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஆவணம்- சான்றிட்ட நகல் |
| 03 | 26.03.1999-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஆவணம்- சான்றிட்ட நகல் |
| 04 | 26.03.1999-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஆவணம்- சான்றிட்ட நகல் |
| 05 | 31.03.1999-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஆவணம்- சான்றிட்ட நகல் |
| 06 | 09.04.1999-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஆவணம்- சான்றிட்ட நகல் |
| 07 | 03.11.2010-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஒப்பந்தம்- சான்றிட்ட நகல் |
| 08 | 19.11.2022-ஆம் தேதியிடப்பட்ட தடங்கல் மனு |

## 02-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள்

| | |
|---|---|
| 01 | 22.10.1996-ஆம் தேதியிடப்பட்ட நிறுவனங்கள் சட்டம் 1956-இன் படிவம் 32 - நகல் |
| 02 | 24.10.1996-ஆம் தேதியிடப்பட்ட விளம்புகை-நகல் |
| 03 | 24.10.1996-ஆம் தேதியிடப்பட்ட 01-ஆம் மனுதாரர் நிறுவனத்தின் முதலாம் ஆண்டறிக்கை - நகல் |
| 04 | 02-ஆம் மனுதாரரின் DIN விவரங்கள்- இணையதள நகல் |
| 05 | 09.10.2025-ஆம் தேதியிடப்பட்ட நிறுவனத்தின் தகவல் - நகல் |
| 06 | 02-ஆம் மனுதாரருக்கும் 01-ஆம், 02-ஆம் எதிர்மனுதாரர் மற்றும் பிரிஸ் கோபால் இனானி ஆகியோருக்கிடையே நடைபெற்ற மின்அஞ்சல் தொடர்பு - இணையதள நகல் |

IIIrd ADJ Court, Salem

07 02-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதியின் வங்கி கணக்கு விவரம்- நகல்

08 01-ஆம் மனுதாரர் நிறுவனத்தின் வங்கி கணக்கு புத்தகத்தின் (நடப்பு கணக்கு) முதல் பக்கம் மற்றும் 01-ஆம் எதிர்மனுதாரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம்- நகல்

**மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

III rd ADJ Court, Salem